St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 17-21

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# சிதைக்கப்படும் சிற்பங்கள்

- முனைவர். ஆ.சுசித்ரா *

## முன்னுரை:

பெண் அவள் இல்லாத எந்த இலக்கியங்களுமே இனிக்காது. ஆதாமைப் படைத்த இறைவன் அவன் மகிழ்ச்சியோடு இருக்க ஏவாளைப் படைத்து பெண்ணின் முக்கியத்துவத்தை இவ்வுலகறியச் செய்தார். சக்தியைப் பிரிந்து சிவன் ஆடிய ருத்ர தாண்டவமும் அதன் விளைவாகப் பெண்ணின் முக்கியத்துவத்தை உணர்ந்து தனது ஒரு பக்கத்தையே சக்திக்குக் கொடுத்தப் புராணச் செய்தியும் நாம் அறிந்ததே. இருளில் ஒளி வீசும் நிலவு எல்லாக் கவிஞர்கட்கும் பெண்ணாகத்தான் காட்சியளிக்கிறது. உலகத்திற்கு ஒளியாகத் திகழும் பெண் ஆடவனையே ஒளிரச் செய்கிறாள். மென்மையான மயிலின் சாயலையும் மருண்ட மானின் நோக்கினையும் புத்தம்புதிய மலர்களின் தோற்றத்தையும் பார்க்கும் போது கலைஞனின் இதயத்தில் முன்வந்து நிற்பவள் பெண். வானும் மண்ணும் ஓடும் நதிகளும் காற்றும் நெருப்பும் நம் இந்தியர்களுக்குப் பெண்ணாகத்தான் தெரிகின்றன. ஆனால் இந்தப் பெண் என்னும் சிற்பம் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு வன்முறையால் சிதைக்கப்பட்டுவருவது நம் நாட்டு வளர்ச்சியைக் கேள்விக் குறியாக்கி விடுகின்றது.

## சங்ககாலப் பரத்தை

சங்ககாலம் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது.அக்காலத்தில் உருவாகிய இலக்கியங்களைச் சங்கஇலக்கியம் என்று அழைக்கின்றனர். இச்சங்கஇலக்கியத்தில் தலைவன் தலைவி இவர்களின் இன்ப வாழ்வில் பரத்தை ஒரு கரும்புள்ளியாகவே காட்டப்படுகின்றாள். சங்க காலத்தில் பரத்தையாக பரிதவித்து நின்ற அவள் குடும்பத்தலைவர்களின் மறைமுக வாழ்க்கைக்குத் துணை நின்றாள். தமிழ்த்தாத்தா டாக்டர்.உ.வே. சா கூறுகையில் “பலவகையானும் உயர்நெறியாகிய அன்புடைய வாழ்க்கை, பூவிற்குப் புல்லிதழ் வாய்த்தாற் போலவும் மதிக்கு மரு வாய்த்தாற் போலவும் பரத்தையர் பிரிவு என்னும் இழிந்த ஒழுக்கத்தினால் சிறிது கலக்கமடைகிறது”(டாக்டர் சரளாராசகோபாலன், சங்கஇலக்கியத்தில் தோழி) சங்ககாலம் என்கின்றார். தொல்காப்பியர் இவ்வொழுக்கத்தை ‘கொடுமை ஒழுக்கம்,(தொல்காப்பியம் பொருளதிகாரம்) என்று குறிப்பிடுகின்றார்.

‘குடும்பப் பெண்ணிற்கு வரையறுக்கப்பட்ட கற்பின் தருமங்கள் இவளுக்கு இல்லை. இவளுக்குப் பொருள் ஒன்றே குறி. குடும்பப் பெண்கட்கு மறுக்கப்பட்ட கல்வி, மற்றும் கலைத் திறமைகள் இவள் வளர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டாள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கடுமையான கற்பியல் ஒருபுறம், பொது மகள் என்று பிரித்து அவளை ஆணின் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் கருவியாகவே

* தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூா (தன்னாட்சி), கடலூா.-1.

கைப்பேசி: 9442993592, மின்னஞ்சல்: soussitra@ymail.com

வைத்திருக்கும் விலைமகளியல் ஒருபுறம். இச்செயல்கள் பெண்ணினத்தை மட்டும் அமுக்கவில்லை. பெண்ணினத்தைக் கூறுகள் போட்டு அவர்களே ஒருவர்க்கொருவர் தாக்கிக் கொள்ளும் ஒரு பரிணாமத்துக்கு இட்டுச் சென்றது.' (ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண்மை)சங்ககால பெண்களில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரத்தையாவது மகிழ்ச்சியோடு வாழ்ந்தாளா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த தேவதாசி முறையும் முத்துலட்சுமிபண்டிட் போன்றோரின் பெரும் முயற்சியால் நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சதி (உடன்கட்டை ஏறுதல்)

எந்த நாட்டிலும் இல்லாத ஓர் அவலநிலை நம்நாட்டில் நிகழ்ந்ததை வரலாறு காட்டுகின்றது அதுவே உடன்கட்டை ஏறுதல். முதல்கற்பு, இடைகற்பு, கடைகற்பு என்று பெண்களின் கற்பை அளவுகோல் கொண்டு அளந்த 'மணிமேகலைக்' காப்பியமும் கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறிய பெண்களை இரண்டாம் கற்பில் வைத்துக் காட்டிச் செல்கின்றது. இறந்த கணவனின் உடலோடு அவன் மனைவியை இறுக்கமாகக் கட்டி இவர்கள் மீது விறகுகளை அடுக்கி நெய் ஊற்றி எரியவிட்டதும் சுற்றி இருப்பவர்கள் குலவை சப்தமிட்டதும் அவ்வொலியில் அப்பெண்ணின் அலறல் மறைக்கப்பட்டதையும் வரலாறு காட்டுகிறது.அவ்வாறு ஒத்துழைக்காத பெண்களை வலுக்கட்டாயமாக இழுத்து அந்த நெருப்பிற்குள் தள்ளிய கொடுமையையும் இராஜாராம்மோகன்ராய் எடுத்துக் கூறி இது உடன்கட்டை ஏறுவது அல்ல. இது பெண்கொலை என்று சாடியுள்ளார்(ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண்மை) இராஜாராம் மோகன்ராய் போன்றோரின் பெரும் முயற்சியால் இக்கொடுமை தகர்க்கப் பட்டது.

ஓர் அரசனின் ஈமச்சடங்கிற்கு அழைக்கப்பட்ட அன்றைய ஆங்கிலேயர் ஒருவர் தன் நாட்குறிப்பில் எழுதும் போது காலை ஆறு மணி முதல் இரவு 7 மணி வரை அவ்விடத்தில் இருந்ததாகவும் அம்மன்னனின் மனைவியர் வரிசையாக உடன் கட்டை ஏறும் நிகழ்ச்சி நடந்து கொண்டே இருந்ததாகவும் பதிவு செய்துள்ளார்'(ரோஸலிண்ட் மைல்ஸ். தமிழாக்கம் வி. ராதாகிருஷ்ணன். உலக வரலாற்றில் பெண்கள்).

## மேலாடைப் போராட்டம்

சாதி வேறுபாடு நம்நாட்டில் தலைதூக்கி இருந்த போது குறிப்பிட்ட சாதியினர்க்கு மட்டுமே மேலாடை அனுமதிக்கப்பட்டது. மற்றவர்கட்கு ஆணுக்கும் பெண்ணுக்குமாக மேலாடை தடை செய்யப்பட்டது. அப்போது சில கயவர்களின் கயமை உள்ளத்தால் மேலாடையை இழந்து நின்றாள் பெண். மற்ற சாதியைச் சேர்ந்த ஆண்கள் ஒன்றுகூடி எங்கள் குலப் பெண்கட்கும் மானம் வெட்கம் இவையெல்லாம் உண்டு என்று கூறி பெரிய போராட்டத்தில் ஈடுபட்டு இந்த மேலாடையைப் பெண்கட்குப் பெற்றுத் தந்தார்கள். அதுவே 'தோள் சீலைப் போராட்டம்', (பொன்னீலன் சமூகவியல் கட்டுரைகள்) இந்த மேலாடையின் முக்கியத்துவத்தை இன்றைய பெண்கள் உணர்ந்திருக்கின்றார்களா என்பது புதிராகவே உள்ளது.

## கைம்பெண் (விதவை)

"கைம்பெண்களின் கண்ணீரைத் துடைக்கவும் தாய்தந்தையற்ற குழந்தைகளின் வயிற்றுக்குச் சோறிடவும் வழி காட்டாத தெய்வத்தையேனும் மதத்தையேனும் நான் நம்ப மாட்டேன்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதாகக் காட்டும் பாரதி தொடர்ந்து "கைம்பெண்களாவோர் யாவர்?" கணவனை இழந்த மாதர். அவர்கள் கணவனை இழந்தார்களேயன்றி உடம்பை இழக்கவில்லை. உணர்வை இழக்கவில்லை. மனுஷ்ய ஹிருதயத்தை இழந்துவிடவில்லை. அவர்கள் கல்லாய் விடவில்லை, மண்ணாய் விடவில்லை" என்று கூறுகிறார். ஆனால் இந்த உணர்வுகளைப் பற்றிய அறிவே இல்லாத பச்சிளம் குழந்தைகள் விதவையாகி நின்ற நிலை நம் இந்தியாவில் மட்டும்தான் அரங்கேறி உள்ளது.

1931இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில்,(மருத்துவர். முத்துச்சிதம்பரம். பெண்ணியம் தோற்றம் வளர்ச்சி.)

| விதவைகளின் வயது | விதவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 0-1 | 597 |
| 1-2 | 492 |
| 3-3 | 1257 |
| 3-4 | 2837 |
| 4-5 | 6707 |
| 5-10 | 85937 |
| 10-15 | 232147 |
| 15-20 | 396162 |
| 20-25 | 742820 |
| 25-80 | 1163720 |

## குழந்தைத் திருமணம்

அக்காலப் பெண்களை வயது வருவதற்கு முன் திருமணம் செய்து வைத்து விடுவார்கள். பிறகு அவள் பூப்பு அடைந்த பின் கணவனுடன் அனுப்பி வைக்கும் சடங்கு நடைபெறும் என்று மேலோட்டமாக அக்காலத் திருமணமுறைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் ஆய்வுகள் காட்டும் இக்குழந்தைத் திருமணத்தின் நிலை நம் இரத்தத்தை உறைய வைக்கின்றது.

"குழந்தைத் திருமணம் என்பது பெண் சிசுக் கொலையின் மறுவடிவம் என்பதை வெளிப்படுத்தி விடுகிறது. 1921இல் பிரிட்டிஷ் அரசின் அதிகாரப் பூர்வமான இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கடந்த பன்னிரெண்டு மாதங்களில் மட்டும் 32இலட்சம் குழந்தை மணப் பெண்கள் இறந்துள்ளனர் என்று பதிவு செய்யப் பட்டுள்ளது. எந்தச் சூழலில் அவர்கள் மரணமடைந்தார்கள் என்பதை பிரிட்டிஷ் இராணுவ மருத்துவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டனர். (அ). வயது 9. திருமணத்திற்கு மறுநாளே இடதுத் தொடை எலும்புப் பிறழ்வு, இடுப்பு எலும்பு உருத்தெரியாமல் நொறுக்கப் பட்டது. சதை துண்டு துண்டாகத் தொங்கியது. (ஆ). வயது 10. நிற்க இயலவில்லை. பெருமளவு ரத்தப் போக்கு சதை மிகவும் புண்ணாக்கப் பட்டிருந்தது. (இ). வயது 9. அறுவை சிகிச்சை மூலம் சீர்செய்ய முடியாத அளவு மிகவும் முழுமையாக உருக்குலைக்கப் பட்டிருந்தாள். அவளுடைய கணவனுக்கு ஏற்கனவே இரு மனைவிகள் உயிருடன் இருக்கிறார்கள். அவர் நல்ல ஆங்கிலம் பேசினார். (ஐ).வயது 7. கணவனுடன் வசிப்பவள் மூன்று நாட்களுக்குப் பின் சொல்லொணா வேதனையில் மரணமடைந்தாள். (எம்). வயது 10. தனது கைகளாலும் முழங்கால்களாலும் மருத்துவமனைக்குத் தவழ்ந்து சென்றாள். திருமணத்திற்குப் பின் அவளால் ஒருபோதும் நிமிர்ந்து நிற்க முடியவில்லை"(ரோஸலிண்ட்மைல்ஸ். தமிழாக்கம் வி. ராதாகிருஷ்ணன். உலக வரலாற்றில் பெண்கள்)

இந்த கொடுமைகளால் தான் பெண் பிள்ளைகள் பெற்ற தாயின் தலைமையிலேயே சிசுகொலைக்கு ஆளாகினார்களோ என்பது ஆய்விற்கு உரியது. இந்த குழந்தைத் திருமணம் இன்றும் மறைமுகமாக நடந்து கொண்டு வருவதை செய்திதாள்கள் காட்டிச் செல்கின்றன. இந்த விதவை மறுமணத்தையும் குழந்தைத் திருமண எதிர்ப்பையும் ஆடவர்கள் ஒன்று கூடி போராடியதன் விளைவே இன்று ஓரளவு இக்கொடுமைகளிலிருந்து பெண் காப்பாற்றப் பட்டுள்ளாள்.

## பாலியல்வன்கொடுமை

பெண் சிறுமைப் பட்டால் நாடே அழிந்துவிடும் (திரு.வி.க)

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு இன்னலைச் சந்தித்து வந்த பெண் இன்று பாலியல் பலாத்காரம் என்ற கொடுமையைச் சந்தித்து திகைத்து நிற்கிறாள். 2 வயது குழந்தை முதல் 60 வயது முதியவள் வரை இந்த கொடுமைக்கு ஆளாகி வருவதை ஊடகங்கள் காட்டிச் செல்கின்றன.இந்த ஊடகங்கள் இன்றைய பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களை அப்பட்டமாகக் காட்டிச்

சென்றாலும் இன்றைய இளைஞர்களின் கனவு தேசமாக விளங்கும் இணையதளத்தில் இந்தியாவில் மட்டும் நான்கு கோடி ஆபாச வலைதளங்கள் இருப்பதாகவும் இணையதள தேடலில் மூன்றில் ஒன்று ஆபாச தளங்கள் என்பதும் அதிர்ச்சித் தரக் கூடியத் தகவலாக உள்ளது.இவற்றைக் கட்டுப்படுத்தாமல் இருப்பதைக் கண்டித்து உச்சநீதி மன்றம் மத்திய அரசைக் கேள்வி கேட்டு இருப்பதும் வரவேற்கக்கூடிய செய்தியாக உள்ளது. (சன்தொலைக்காட்சி விவாதமேடை 31.08.2014).

பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்கொடுமைகள் பற்றிய செய்திகள் தன்னைத் தலைகுனிய செய்வதாகவும் இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதில் சட்டத்தைவிட பெற்றோருக்கே அதிக பொறுப்பு உள்ளது என்றும் நம் இந்திய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில் உங்கள் வீட்டில் உள்ள பெண் குழந்தைகட்குக் கட்டுப்பாடு விதிக்கின்றீர்களே அதை ஆண்குழந்தைகட்கும் விதியுங்கள் என்று வலியுறுத்துகின்றார். சட்டம் தன் கடமையைச் செய்தாலும் சமூகத்தின் உறுப்பினர்களாகிய பெற்றோரும் பொறுப்பேற்க வேண்டும் என்று தனது சுதந்திர தின உரையில் பெண்கட்கு முக்கியத்துவம் அளித்துப் பேசியிருப்பது நம் நாட்டுப் பெண்களுக்கு ஆறுதல் அளிக்கும் செய்தியாக உள்ளது. (பிரதமர் மோடி அவர்களின் சுதந்திர தின உரை 15.08.2014).

'பெண்களைச் சிறப்பிக்காத நாடு அடிமைப் படும்' என்ற பாரதி மாதர்கள் உதவியின்றி ஒரு தேசமும் எவ்வித அபிவிருத்தியும் அடைய முடியாது அட பரம மூடர்களா! ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்? பதிவிரதத்தைப் பெண்களை மட்டும் காப்பாற்றுமாறு துன்புறுத்தும் ஆடவர்களை, சீச்சி, மானங்கெட்ட தோல்வி ஆண்களுக்கு! அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை!" (பாரதி கட்டுரைகள்) என்ற கூற்று இதைப் போன்ற ஆடவர்கட்குச் சாட்டையடியாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் நம் நாட்டு முன்னணி நடிகையான 'மல்லிகா ஷெராவத்' பேசியபோது இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்த வகையில் உள்ளது. இதைத் தடுக்க அரசும் நீதித்துறையும் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்ட பிறகும் இந்த கொடூர சம்பவங்கள் குறைந்தபாடில்லை. 20 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு பெண் கற்பழிக்கப் படும் அவலம் அங்கு நடைபெறுகிறது. இதைக் கடுமையான சட்டங்களால் மட்டும் தடுக்க முடியாது. கற்பழிப்புகளுக்கு எதிராக ஆண்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தால்தான் தடுக்க முடியும். (தினமலர் 30.8.2014 கடலூர்) என்று கூறியிருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பெண்ணின் பங்கு

பாலியல் பலாத்காரத்திற்குப் பெண்கள் மீது சுமத்தப்படும் காரணம் அவள் சரியான ஆடையைத் தேர்வு செய்யவில்லை என்பது தான்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு (குறள்788)

இக்குறளில் வள்ளுவர் ஆடை நழுவும் போது ஒருவனின் கை எப்படி துரிதமாக அதைச் சரிசெய்ய முன்வருகிறதோ அதுபோல நண்பன் உற்ற துன்பத்தைக் கலைய முன்வர வேண்டும் என்கிறார். இன்று பெண்கள் அணியும் ஆடை நழுவுவதற்கே இடமில்லை. மேநாட்டு நாகரீகத்தில் பெண்கள் திளைத்து அந்த சீதோஷன நிலைக்கேற்ப ஆடையை இங்கு உடுத்தி ஆடைபாதியாகக் குறைக்கப்பட்டதின் விளைவே இன்றைய பாலியல் பலாத்காரத்திற்கு வித்திட்டதாகப் பலர் குற்றம் சாட்டுகின்றனர்.

"ஒரு பெண் தாவணி உடுத்தும் போது உடலில் இடை பகுதி வெளியில் தெரியும் அப்பொழுது அந்தப் பெண் தன் உடலில் தெரியும் பாகங்களை மறைக்க அடிக்கடி தன் ஆடையைச் சரிசெய்வாள். தன் அங்கங்கள் வெளியில் தெரியக்கூடாது என்பதற்காக மிகவும் கவனமாக இருப்பாள். இதன்மூலம் நாணம் என்ற ஒன்று இயற்கையாக அவர்களிடம் வந்துவிடுகிறது. ஆனால் தற்போதைய பெண்கள் மேலிருந்து கீழ்வரை ஒரே ஆடை அணிகிறார்கள். இடைபகுதி வெளியில் தெரிவதில்லை அதை சரிசெய்ய அவசியமில்லை அதனால் நாணம் என்ற ஒன்று இல்லவே இல்லை. ஆனால் இந்த வடநாட்டு

ஆடையையும் அணியலாம் அதற்கான துப்பட்டாவை சரியாக அணிந்தால்! மேலும் பெண்களே இறுக்கமாக உடை அணிந்து ஏன் மற்றவர்களைக் கிறுக்குப்பிடிக்க வைக்கின்றீர்கள்?" (Wikipedia: http://eluthu.com/kavithai/208084.html/.பெண்ணே நீயும் பெண்ணா: சஹானாதாஸ்) என்ற ஒரு பெண் ஆடை வடிவமைப்பாளரின் ஆதங்கம் சற்று சிந்திக்கக் கூடியதாக இருக்கின்றது.இளம் பெண்களின் ஆடை குறைப்பில் மதியிழக்கும் ஆண்களின் பார்வைதான் குழந்தைகள் மீதும் முதியவர்கள் மீதும் முறைதவறி போகிறதோ என்று எண்ண வேண்டியுள்ளது.மேலும் அவர் கூறுகையில் "அல்லி வட்டமும் புல்லி வட்டமும் சேர்ந்தால்தான் மலருக்கு அழகு! விதையைச் சதை பகுதி மறைத்தால்தான் அது பழம்! சிறிது காலம் வாழும் மலருக்கும் விதைக்கும் இப்படியொரு நியதியென்றால் தலைமுறைகளைத் தாண்டி வாழும் மனித மரபிற்கு என்னென்ன நியதி வேண்டும்?" இதை இக்காலத்து நவநாகரீகப் பெண்கள் சிந்திக்க வேண்டும்.

பெண்கட்குச் சம உரிமை வேண்டும் என்று போராடிய பாரதியும் "ராஜாங்க சுதந்திரங்கள் ஸ்திரீகளுக்கு வெகு முக்கியமானவைகள் அல்ல. அநாகரிக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்கு இப்போது முக்கியமாக வேண்டியது" என்ற கருத்து ஆடையால் உடலை மூடி வாழ்ந்த பாரதியின் காலத்திலேயே பெண்களின் கற்பிற்கு பாதுகாப்பற்றச் சூழல் நிலவியிருக்கிறது என்றால் இப்போதையநாகரீக உலகைக் கருத்தில் கொண்டு பெண்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசர காலத்தில் இருப்பதை உணர வேண்டும்.

கூந்தல்இடம் மாறிற்று குழாய்கள் இடம்மாறிற்று

நெருங்கி நாம் பார்த்தால்தான் நிச்சயிக்க முடிகிறது(சௌந்ராகைலாசம்)

ஆடை சுதந்திரம் கிடைத்து விட்டது கண்ட கண்ட துறைகளில் எல்லாம் பெண்கள் கைவரிசை காட்டி சிகரத்தைத் தொட்டு விட்டார்கள். ஆனால் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இந்த கொடுமைகளால்,

எங்களுக்கும் மரியாதைஇவ்வளவே என்றழுது

கண்களுக்குள் குளங்காட்டும்காரிகையர் எத்தனைப்பேர் (சரிநிகர் சமானம். திருமதி சௌந்ரா கைலாசம்)

உலக நாடுகள் மத்தியில் இந்தியா பொருளாதாரம் கல்வி வேலைவாய்ப்பு இவைகளில் வளர்ச்சி நிலையை அடைந்து வந்தாலும் இந்த இழி செயல் நாட்டு மக்கள் அனைவரையும் அவமானத்திற்குள்ளாக்கி விடுகின்றது. இந்த பாதகர்கள் அயல்நாட்டிலிருந்து வருகைப் புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மாணவிகளுக்கும் செய்யும் பாலியல் கொடுமைகளால் அயல்நாட்டார் பார்வையில் நாம் தரம் தாழ்ந்தவர்களாகக் காட்சியளிக்கின்றோம். பெண்கள் என்னும் சிற்பங்கள் சிதைக்கப்படும் போதெல்லாம் ஆண்கள் அவர்களுக்குத் துணை நின்று அச்செயலைத் தகர்த்தெரிவது போன்றே இந்நிகழ்விலும் இளைஞர்களும் காவல்துறை அதிகாரிகளும் சமூக ஆர்வலர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் அரசியல்வாதிகளும் ஒரே மூச்சாக போராட்டத்தில் குதித்தால் இந்த கொடுமையையும் தகர்த்தெரியலாம். "பாரதத்தின் வெற்றிகளிலும் சிறப்புகளிலும் நம் பெண் குழந்தைகளுக்குப் பங்கு உண்டு. இதை வரவேற்றுப் பெண்களையும் தோளோடு தோள் சேர்த்துக்கொண்டால் தான் நம் சமூகத்தில் உருவாகி உள்ள தீமைகளில் இருந்து முக்தி பெற முடியும்?"(15.08.2014) என்று முழங்கிய பிரதமர் மோடி அவர்களின் உரையை மெய்ப்பிக்க ஆண் பெண் பேதமின்றி நாம் அனைவரும் ஒன்று கூடுவோம்.